

வில்லியனூர் நகரப் பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட திமுக வேட்பாளர் இரா. சிவா அவர்கள் வில்லியனூர் நகரப் பகுதியில் சுமார் 150 கோடிக்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளை வாக்காளர்களிடம் பட்டியலிட்டு வாக்கு சேகரித்தார். வாக்கு சேகரிப்பின்போது, திமுக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ ஆலோசனைப்படி, விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க வழக்கறிஞர் அணி சார்பில் திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் (WAR ROOM) அலுவலகத்தை விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு. தங்கம், கல்பட்டு வி.இராஜா, கை.ரா. சடகோபன், கு.தீனதயாளன், பொதுக்குழு உறுப்பினர் காடுவெட்டி ஏழுமலை, நகர செயலாளர் பூக்கடை கணேசன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வீர. சுரேஷ்பாபு, மாவட்ட தலைவர் ராஜகோபால், மாவட்ட துணை தலைவர் சண்முகம், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கார்த்திகேயன், எழிலன், ராஜேஷ், சன்.ஐயப்பன், பாலச்சந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### வருகின்ற சட்டமன்றத் தேர்தலில்

# தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு ஒருமித்த ஆதரவு!

## ஐக்கிய முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் மாநில செயற்குழுக் கூட்டத்தில் முடிவு!

திண்டுக்கல், மார்ச் 30-

வருகின்ற சட்டமன்ற தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணிக்கு ஒருமித்த ஆதரவு வழங்க ஐக்கிய முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் திண்டுக்கல்லில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஐக்கிய முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் தலைமை செயற்குழு கழகத்தின் தலைவராகிய ஹைதர் அலி தலைமையில் திண்டுக்கல் நகர் பேகம்பூரில் உள்ள மதினா பேலஸ் மண்டபத்தில் தலைமை செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் மாநில பொதுச்செயலாளர் திருப்பூர் ஹாலிதீன், மாநில துணைத்தலைவர் முசாகிதீன், மாநில துணைப் பொதுச் செயலாளர் மஞ்சக்குடி பாபு, மாநிலச் செயலாளர்கள் அதிரை அகமது ஹாஜா, திண்டுக்கல் ஜமால் முகமது, மதுரை சிக்கந்தர், அப்துல் ஹாலிக், காஞ்சி ஹைதர் அலி, புழல் பசீர், பொறியாளர் பக்ருதீன் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர். இதில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திமுக தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு**

சமூகநீதி மண்ணான தமிழ்நாட்டில் நிலவி வரும் சமூக மற்றும் சமய நல்லிணக்கத்திற்கு ஊறு ஏற்படாமல் பாதுகாத்திடவும், பிரிவினைவாதிகளுக்கு உரிய பாடம் புகட்டிடும் வகையில், நடைபெற இருக்கின்ற 2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில், மதசார்பற்ற கூட்டணியான திமுக தலைமையில் அமைக்கப்பட்டுள்ள அணிக்கு ஐக்கிய முஸ்லிம் முன்னேற்றக் கழகம் தனது முழுமையான ஆதரவைத் தருவது என்று இக்கூட்டம் ஏகமனதாக முடிவு செய்கிறது.

மக்களிடையே மதங்களால் பிரிவினையை ஏற்படுத்தித் தமிழ்நாட்டிலும், வடமாநிலங்கள் போன்று சமூக நல்லிணக்கத்தை சிதைத்துவிட வேண்டும் எனும் தீய எண்ணத்துடன் செயல்படும் பாசிசக் கூட்டம் பல்வேறு வடிவங்களில் தமிழக அரசியல் களத்தில் வலம் வருகின்றனர். இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் இதுவரை வாக்களித்து வந்த தமிழ்நாட்டு மக்களாகிய நாம் அனைவரும், இந்த முறையும் அதீத விழிப்புணர்வுடன் வாக்களித்து பிரிவினைவாதிகளையும், அவர்களுக்குத் துணை நிற்பவர்கள் எந்த வடிவத்தில் வந்தாலும், இந்த மண்ணை விட்டு வேரோடும், வேரடி மண்ணோடும் விரட்டியடிக்கும் வகையில் வாக்களிக்க வேண்டும் என ஐக்கிய முஸ்லிம் முன்னேற்றக் கழகம் அனைவரையும் கோருகிறது.

### திருவாரூர் அஞ்சுகத்தம்மையார் நினைவிடத்தில்

# கழக வேட்பாளர்கள் பூண்டி கலைவாணன் - டி.ஆர்.பி.ராஜா மரியாதை!

## முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலையை வணங்கி பிரச்சாரத்தை துவக்கினர்!

திருவாரூர்,மார்ச் 30-

திருவாரூர் மாவட்டத்தை உள்ளடக்கிய திருவாரூர் மற்றும் மன்னார்குடி சட்டமன்ற தொகுதி களுக்கு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் கழக வேட்பாளர்களாக கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களோடும், வான் நின்று வாழ்த்தும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நல் ஆசிகளோடும் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டி ருக்கும் பூண்டி. கே. கலைவாணன் முனைவர். டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் அன்னை அஞ்சுகத்தம்மையார் நினைவிடம் ,முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலை உள்ளிட்ட இடங்களில் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தலைமைகழகத்தால் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் திருவாரூர் மற்றும் மன்னார்குடி சட்டமன்ற தேர்தலில் போட்டியிட கழக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட நிலையில், கழக தோழர்கள் அந்தந்த பகுதிகளில் பட்டாசு வெடித்தும் இனிப்புக்கள் வழங்கியும் தங்கள் மகிழ்ச் சிகளை வெளிப்படுத்தினார்.

அதனை தொடர்ந்து மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் , முனைவர் டி. ஆர்.பி.ராஜா ஆகியோர் இணைந்து காட்டூரில் உள்ள அஞ்சுகத்தம்மையார் நினை விடத்தில், அம்மையார் நினைவிடம் ,முரசொலி ஆசிரியர் செல்வம், முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலிமாறான் ஆகியோர் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் திருவாரூர் நாகை சாலையில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலை , பழய பேருந்துநிலையத்தில் உள்ள தந்தை பெரியார் சிலை, நகர கழக அலுவலகம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா சிலை , மற்றும் காட்டூர் கலைஞர் கோட்டம் ஆகிய இடங்களுக்கு சென்று மலர்தூவியும் மலர் மாலை அணிவித்தும் மரியாதை செலுத்தி னர்.

பின்னர் திருவாரூரில் இயங்கவிருக்கும் கழக வார் ரூம் [war roorm] அலுவலகத்தை மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் திறந்து வைத்தார். நிகழ்வு களில் ஒன்றிய செயலாளர்கள் ஆர். பாலச்சந்திரன், புலிவலம் ஏ.தேவா, சேகர் கலியபெருமாள், ஐ.வி. குமரேசன், நகர செயலாளர்கள் வாரை.எஸ்பிரகாஷ், எஸ்.வி.பக்கிரிசாமி, பூண்டி.கே. கலைவேந்தன், மன்னார்குடி தொகுதி நகர செயலாளர் வீரா.கணேசன், நகர் மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ். டி.முதுவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே,வி.கே.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### தருமபுரி மாவட்டத்தில் ஊட்டச்சத்து உணர்திறன்

# வேளாண்மையை ஊக்குவிக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் ஆ.மணி கேள்வி!



தருமபுரி, மார்ச். 30-

ஊட்டச்சத்து உணர்திறன் வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் சிறு தானியங்கள்,பருப்பு வகைகள்,பழங்கள் மற்றும் காய்கறிகள் கிடைக்கும் தன்மை,அணுகல் மற்றும் அதன் நுகர்வை மேம்படுத்தும் நோக்கில் ஒன்றிய அரசு ஏதேனும் வழிமுறைகளையோ அல்லது கொள்கைகளையோ வகுத்துள்ளதா?

மழையையே வேளாண்மைக்கு பெரிதும் நம்பியுள்ள தமிழ்நாட்டில் குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் இது போன்ற ஏதேனும் திட்டங்களை ஒன்றிய அரசு செயல்படுத்தி உள்ளதா?

ஊட்டச்சத்து நிறைந்த பயிர்கள்,சமையலறை தோட்டம்,உயிர்ச்சத்து செறிவூட்டப்பட்ட இரகங்கள்,மற்றும் ஒருங்கிணைந்த பண்ணை முறை ஆகியவற்றை தருமபுரி மாவட்டத்தில் மேம்படுத்த ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் அதன் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டம் முழுவதும் பெண்கள்,குழந்தைகளின் ஊட்டச்சத்து,பொது சுகாதாரம் குறித்த திட்டங்கள் சரிவர சென்றடைந்துள்ளதா என்பதை ஒன்றிய அரசு உறுதிப்படுத்தியுள்ளதா?

தருமபுரி மாவட்டத்தில் உள்ள சிறு,குறு விவசாயிகளிடயே ஊட்டச்சத்து உணர்திறன் வேளாண்மையை ஊக்குவித்து,விழிப்புணர்வை மேம்படுத்தி,திறன் மேம்பாடு மற்றும் சந்தை ஆதரவிற்கு ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை இணைஅமைச்சர் பகீரத் சௌத்ரியிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

## மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் தனித்து போட்டி!

கொல்கத்தா, மார்ச் 30-

மேற்கு வங்கத்தில் தனித்து போட்டியிட காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது.

மேற்கு வங்கத்தில் வரும் ஏப்ரல் 23 மற்றும் 29 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது....

மம்தா பானர்ஜி தலைமையிலான ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சியான பாஜக இடையே நேரடி போட்டி நிலவுகிறது....

இந்நிலையில், மேற்கு வங்கத்தின் 294 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது. விரைவில் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் பட்டியல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2021 தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணியில் போட்டியிட்டு தோல்வியடைந்த காங்கிரஸ் கட்சி தற்போது தனியாக களமிறங்கவுள்ளது....

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வாணியம்பாடி வீ. சிவாஜிகணேசன்**

**மார்ச் 30 (2015)**



வேலூர் மாவட்டம், வாணியம்பாடி நகரக் கழகச் செயலாளராக 25 ஆண்டுகள் தொடர்ந்து கழகப் பணியாற்றியவர்.

வாணியம்பாடி நகர்மன்ற உறுப்பினராக 10 ஆண்டுகளும்; வாணியம்பாடி நகர்மன்ற தலைவராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்நகர மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவராகவும், வாணியம்பாடி நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும், தென்னக ரயில்வே துறை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# 8-ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 27.02.1984

மறைவு : 30.03.2018

திருமதி. **ர.கனிமொழி** M.Sc.,M.Phil.,

வானத்தில் நிலவாய்... வையகத்தில் தென்றலாய்...
எங்கள் இதயத்தில் என்றென்றும் வாழும் உனக்கு

**எங்களது இதய அஞ்சலி**

பெற்றோர் : **ப.கோவிந்தராசன்** M.A.,
கீழ்வேளூர் ஒன்றிய கழக செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர்
**வசந்தி கோவிந்தராசன்**

மற்றும் **குடும்பத்தினர்கள், நண்பர்கள்**
**இராதாமங்கலம், கீழ்வேளூர் ஒன்றியம், நாகப்பட்டினம் மாவட்டம்**